போரதீவுப்பற்று பிரதேச சபை-2013

---

1. நிதிக்கூற்றுக்கள்

---

1.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

---

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களை 2014 மார்ச் 27 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2013 ஏப்ரல் 10 ஆந் திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 திசெம்பர் 04 இல் சபையின் தவிசாளருக்கு வழங்கப்பட்டது.

1.2 அபிப்பிராயம்

---

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து போரதீவுப்பற்று பிரதேச சபையின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக்கூற்றுகளின் மீதான கருத்துரைகள்

---

1.3.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்குதல்

---

உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சு செயலாளரின் 2014 சனவரி 27 ஆம் திகதிய பீஎல்/05/பீஏ/எஸ்எவ்பீஎஸ்ஏஎஸ் ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களைப் பின்பற்றி நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

-------------------------------------------

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(அ) மீளாய்வாண்டிற்காகச் செலுத்த வேண்டிய ரூபா.16,000 தொகையான கணக்காய்வுக் கட்டணத்துக்காக கணக்குகளில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2011 ஆம் ஆண்டில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கினால் மண்டூர் பொது நூலகத்திலுள்ள 141 புத்தகங்கள் முற்றாக அழிக்கப்பட்டிருந்தும் அவை ஏடுகளிலிருந்து பதிவழிக்கப்படாமல் உள்ளதனால் நிதிக்கூற்றில் சொத்துக்களின் பெறுமதி அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(இ) 1990 ஆம் ஆண்டில் ஏற்பட்ட யுத்த சூழ்நிலையின் காரணமாக ரூபா.2,525,601 பெறுமதியான தளபாடங்கள் அழிக்கப்பட்டிருந்த போதிலும், அவை பதிவழிக்கப்படாமல் உள்ளதனால் நிதிக்கூற்றில் சொத்துக்களின் பெறுமதி அத்தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியினர் கடன் மீதியானது பேரேட்டின் படி ரூபா.2,391,852 ஆகக் காணப்பட்டபோதிலும் நிதிக்கூற்றுக்களுக்கு ரூபா.2,489,157 ஆகக் கொண்டு வரப்பட்டதனால் அத்திகதியில் உள்ளவாறானகடன் மீதியானது ரூபா.97,305 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(உ) உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சிடமிருந்து 2008 ஆம் ஆண்டில் கிடைக்கப் பெற்ற ரூபா.1,319,050 பெறுமதியான ஒரு கெப் வாகனம் கணக்கிற்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை.

1.3.3 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

--------------------------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(அ) 2013 ஆம் ஆண்டின் இறுதியில் 02 தொடக்கம் 10 ஆண்டுகள் வரை நிலுவையாக உள்ள ரூபா.37,950 தொகையான அரசிறை வருமானங்களை அறவிடுவதற்கு அல்லது அதற்காக ஏற்பாடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 1991-2010 ஆம் ஆண்டு காலப்பகுதியில் பல்வேறு தேவைகளுக்காக 12 ஊழியர்களுக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா.70,304 தொகையான முற்பணங்களை அறவீடு செய்வதற்கு அல்லது பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதுதொடர்ச்சியாகநிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுவருகின்றது.

(இ) செலுத்த வேண்டிய ரூபா.34,666 தொகையான முற்பணங்கள் கொடுத்து தீர்க்கப்படாது 2009 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ச்சியாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுவருகின்றது.

1.3.4 கணக்காய்வுக்கான சான்றுகள் இன்மை

---

நிதிக்கூற்றுக்களிலுள்ள பின்வரும் கணக்கு விடயங்களுக்கு எதிரே சுட்டிக்காட்டப்பட்ட சான்றுகள் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| கணக்குவிடயம் | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள். |
|---|---|---|
| | ரூபா | |
| காணிகள், கட்டடங்கள் | 152,550,242 | காணி உறுதிப்பத்திரம் |
| பொறித்தொகுதியும், இயந்திரங்களும் | 1691,880 | நிலையான சொத்துககள் பதிவேடு மற்றும் மெய்மையாய்வுச் சபை அறிக்கைகள். |
| தளபாடங்களும், பொருத்துக்களும் | 912,499 | |
| மோட்டார் வாகனங்கள் | 3,539,960 | |
| நூல் நிலையபுத்தகம் | 1,634,005 | |

1.3.5 சட்டங்கள் விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுகளுடன் இணக்கமின்மை.

---------------------------------------------------------------------------------------------------------------------------------

கீழே காட்டப்பட்டுள்ள சட்டங்கள் மற்றும் விதிகள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் போன்றவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மை |
| --- | --- |
| (அ) 1988ஆம் ஆண்டின் பிரதேச சபைகள் நிதி, நிருவாக விதிகள் | |
| (i) அத்தியாயம் I இன் பிரிவு 5(XII) | பணம், களஞ்சியப் பொருட்கள் மற்றும் காசோலைகளில் கையொப்பம் இடல் என்பவை நான்கு உத்தியோகத்தர்களுக்கு நிர்வாக ரீதியாக் ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும் அவர்களிடமிருந்து பாதுகாப்பு பிணை பெறப்பட்டிருக்கவில்லை. |
| (ii)அத்தியாயம் III இன் பிரிவு 81 | காணி உரிமைமாற்றல் சம்மந்தமான முத்திரைத் தீர்வைகளை மீளளிப்புச் செய்யக்கோரும் விண்ணப்பங்கள் பதிவாளர் நாயகத்திற்கும் தண்டப்பணங்களை மீளளிப்புச் செய்யக்கோரும் விண்ணப்பங்கள் நீதிமன்றங்களின் பதிவாளருக்கும் ஒவ்வொரு காலாண்டு இறுதியிலும் சபையினால் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii)அத்தியாயம் X இன் பிரிவு 191 | மீளாய்வாண்டின் மூன்று சபைக் கூட்டங்கள் நடைபெற்றிருந்த போதிலும், அக் கூட்ட அறிக்கைகளின் உறுதிப்படுத்திய பிரதிகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) கிழக்கு மாகாண திறைசேரி சுற்றறிக்கை இலக்கம்; PT/09/2010 | பிராந்திய பெறுகைகள் குழு மற்றும் பிரதேச பெறுகைகள் குழு என்பவற்றிற்கு வெளி அலுவலகத்தைச் சேர்ந்த ஒருவர் மூன்றாவது உறுப்பினராக உள்ளடக்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு |

உள்ளடக்கப்படாது மீளாய்வாண்டின் கேள்விச் சபை தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

2. நிதிமீளாய்வு

----------------------

2.1 நிதிவிளைவுகள்

--------------------------

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுகளின் படி 2013 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான மீண்டுவரும் செலவினங்களிலும் கூடியவருமானம் ரூபா.3,274,374 ஆகும். இதனோடொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினங்களிலும் கூடிய வருமானம் ரூபா.1,940,011 ஆக இருந்தமை நிதிவிளைவுகளில் ரூபா.5,214,385 முன்னேற்றத்தைக் காட்டுகின்றது.

2.2 வருமான முகாமைத்துவம்

----------------------------------------

2.2.1 வருமானச் சேகரிப்பின் செயலாற்றல்

----------------------------------------------------------

சபையினால் சமர்ப்பிக்கப்பட்டவாறு மீளாய்வாண்டு தொடர்பான மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ள படியான வருமானம் என்பவற்றிற்கிடையில் குறிப்பிடத்தக்க வேறுபாடு அவதானிக்கப்பட்டுள்ளது.

| வருமானவிடயம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | உள்ள படியான வருமானம் | வேறுபாடு |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| வாடகை | 438,400 | 697,500 | 259,100 |
| உரிமங்கள் | 920,000 | 1,689,571 | 769,571 |
| ஏனைய வருமானங்கள் | 3,965,000 | 2,912,224 | (1,052,776) |
| அரசிறை வருமானம் | 10,913,990 | 11,737,483 | (873,493) |

2.2.2 வீதவரிகள் மற்றும் வரிகள்

-----------------------------------

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 134 ஆம் பிரிவுக்கு அமைய, பிரதேச சபையின் அதிகாரத்திற்குட்பட்ட இடங்களில் உள்ள காணிகள் மற்றும் நிர்மாணிக்கப்பட்ட வீடுகள், கட்டிடங்கள் என்பவற்றின் மீது வீதவரிகளை அறவீடு செய்வதற்காக விலைமதிப்பீட்டுத் திணைக்களத்தினால் ஆண்டுப் பெறுமதியை மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாததினால் சபை வருடாந்தம் அண்ணளவாக ரூபா.800,000 தொகையான வருமானத்தை இழந்துள்ளது.

3. செயற்பாட்டு மீளாய்வு

--------------------------------

3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

-----------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 1990-2002 காலப்பகுதியில் இடமாற்றம்/ ஓய்வுபெற்றுச் சென்ற ஏழு ஊழியர்களின் கடன் நிலுவைகள் ரூபா. 486,097 தொகையை இளைப்பாற்றுப் பணிக்கொடையிலிருந்து அல்லது பிணையாளர்களிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது தொடர்ச்சியாக அறவிடவேண்டியவைகளாக ஏடுகளில் காட்டப்பட்டுவருகின்றது.

(ஆ) குறித்தொதுக்கப்பட்ட மாகாண அபிவிருத்தி மானியத்தின் கீழ் விவேகானந்தபுரம் மற்றும் நெல்லிக்காடு ஆகிய இடங்களில் இரண்டு கிணறுகளையும் அதனுடன் இணைந்த இரண்டு அணுகு வீதிகளையும் நிர்மாணிப்பதற்கு ரூபா.633,930 தொகைக்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டு வேலைகள் பூர்த்தி செய்யப்பட்ட போதிலும், 2014 மே 05 ஆம் திகதி மேற்கொண்ட வெளிக்களப் பரிசோதனையின் போது குறித்த இரண்டு அணுகு வீதிகளும் நிர்மாணிக்கப்படாது அதற்காக ஒப்பந்தக்காரருக்கு பணம் செலுத்தப்பட்டமை அவதானிக்கப்பட்டது. ஆகவே, செய்யப்படாத வேலைகளுக்காக ஒப்பந்தக்காரருக்கு ரூபா.136,000 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்.

---------------------------------------------------------------

4.1 உள்ளகக் கணக்காய்வு

------------------------------

ஓவ்வொரு உள்ளூராட்சி மன்றத்திலும் தமது ஆற்றலுக்கு ஏற்றவாறு உள்ளக கணக்காய்வு பிரிவு ஒன்றை உருவாக்கி கொள்ள வேண்டுமென மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் 2005 நவம்பர் 08 ஆம் திகதிய 03 ஆம் இலக்க உள்ளூராட்சி மறுசீராமைப்புச் சுற்றறிக்கையின் 8 ஆம் பந்தியில் தெரிவிக்கப்பட்ட தற்கமைய சபையில் உள்ளக கணக்காய்வு பிரிவு ஏற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

--------------------------------

பாதீடு செய்யப்பட்ட செலவினத்திற்கும் உள்ளபடியான செலவினத்திற்கும் இடையில் 11% தொடக்கம் 40% வரையான முரண்கள் அவதானிக்கப்பட்டமையினால் பாதீடானது முகாமையின் ஒரு வினைத்திறனான கட்டுப்பாட்டுக்கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டுள்ளது.

5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

----------------------------------------------------------

கீழ்வரும் கட்டுப்பாட்டுவிடயங்கள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) நிலையானசொத்துக் கட்டுப்பாடு

(இ) பாதீட்டுக்கட்டுப்பாடு

(ஈ) வருமானசேகரிப்பு